காலை முரசு
பக்கங்கள்:-14
முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 13 | புதன்கிழமை | 30.10.2024 | அதிர்வு 89

வடக்கில் அரச நிர்வாகத்துக்குள்

## ஜே.வி.பியின் தலையீடுகள் அதிகரிப்பு!

(பிரபாகரன் டிலக்சன்)

வடக்கில் அரச நிர்வாகச் 05



### அநுரவின் அரசியல் தலைமை 'அந்தர் பல்டி'

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் மறுப்பு!

### அதிகார பீடத்தின் உண்மை முகம் அம்பலம்

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிழையொன்றுமில்லை. அது பயன்படுத்தப்பட்டு வந்த விதமே தவறு."

- இப்படி ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை இயக்குநர் ஜே. எம். விஜயபண்டார தெரிவித்திருக்கின்றார்.

எதிரணியில் இருந்த போது பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக மோசமானது எனத் தெரிவித்து அதை முழு மூச்சில் - ஆக்ரோஷமாக - எதிர்த்து வந்தவர் அநுரகுமார திஸாநாயக்க. அந்தச் சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தவர். இப்போது ஜனாதிபதியாகி, அந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பிரயோகிக்கும் தனித்துவ அதிகாரம் தன் தரப்புக்கு வந்ததும் பிளேட்டை மாற்றிப் போடுகின்றார் அநுரகுமார திஸாநாயக்க. 05

# சறுக்குகின்றது அநுர அரசு!

### தமிழரசின் பேச்சாளர் சுமந்திரன் காட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்ட விவகாரத்தில் அநுரகுமார திஸாநாயக்க அரசு சறுக்கத் தொடங்கி விட்டது என்று தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

பயங்கரவாதத் தடைச் சட்ட விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை இயக்குநர் ஜே. எம். விஜயபண்டார, அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத், தேசிய மக்கள் சக்தி கட்சியின் முக்கியஸ்தர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் வெளியிட்ட கருத்துகளுக்கு தமது "எக்ஸ்" தளத்தில் எம்.ஏ.சுமந்திரன் பதிலளித்திருக்கின்றார். 05






ஜனாதிபதியாக அதிகாரத்திலிருந்த போது சட்டத்தைத் தன் கையில் எடுத்து, எதேச்சாதிகாரமாக செயல்படுகிறார் ரணில் விக்கிரமசிங்க, இதன் விளைவுகளைப் பதவியை விட்டு இறங்கிய பின்னர் அவர் எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்று இந்தப் பத்தியிலும், நம் இதழின் ஆசிரியர் தலையங்கங்களிலும் பல தடவைகள் தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

இப்போது ஜனாதிபதி பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க இறங்கிவிட்டார். இனி, இதுவரை இழைத்த சட்டவிரோதத் தவறுகளுக்கு அவர் பதில் சொல்ல வேண்டி இருக்கும்.

ஏற்கனவே நிதி அமைச்சர் என்ற முறையில் தமக்கிருந்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி உள்ளூராட்சி தேர்தலை நடத்த விடாமல் தடை போட்டவர் ரணில் விக்கிரமசிங்க. அதற்கான சட்டக் கடப்பாட்டை – பொறுப்பை – அவர் எதிர்கொள்ள வேண்டி வரலாம். அது நிலுவையில் 05

# வடக்கு பொறிமுறையின் தோல்விக்கு காரணமான டக்ளஸ் மீது நடவடிக்கை

## அநுர அரசு எடுக்க வேண்டும் என்கிறது 'பசு' சுயேச்சை



வடக்கில் கல்வி, சுகாதாரம் உட்பட ஒட்டுமொத்தப் பொறிமுறையையும் தோல்வியடையைச் செய்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது பொறிமுறை மாற்றம் ("சிஸ்டம் சேன்ஜ்") பற்றிப் பேசும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் ஆட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் பசு சின்னத்தில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சுயேச்சையாகப் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்க முதன்மை வேட்பாளர் தேவானந்த.

யாழ். நல்லூரில் செய்தியாளர்களிடம் அவர் பேசும்போதே இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தமிழர்களின் சொத்துக் கல்வி. அதை நாங்கள் பேணிப் பாதுகாக்கவேண்டும். இப்போது கல்வியில் நாம் மிகவும் பின்னடைந்திருக்கின்றோம். இலங்கை முழுவதிலும் யாழ். மாவட்டமே கல்வியில் பின் தங்கியிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணம் கல்வி விடயங்களில் அரசியல்வாதிகளின் தலையீடு.

அரசியல் தலையீடு காரணமாக தகுதியானவர்கள் ஒதுக்கப்பட, தகுதியற்றவர்கள் அரசியல்வாதிகளைப் பிடித்துக் கொண்டு பதவிகளுக்கு வருகின்றார்கள். கல்வித் தரம் கீழ் நிலைக்குச் சென்றமைக்கு அதுவும் ஒரு காரணம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீடுகள் காரணமாக கல்வி முன்னேற்றம் தடைப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகப் பேரவையில் டக்ளஸ் தேவானந்தாவின் அடிவருடிகள் நியமிக்கப்படுகின்றார்கள். அமைச்சருக்குத் தேவையானதைத்தான் அவர்கள் செய்கின்றார்கள்.

இதில் மேலும் கவலைக்குரிய விடயம் பேராசிரியர்களும், கல்விமான்களும் டக்ளஸ் தேவானந்தாவின் அலுவலகம் அமைந்துள்ள "தியட்டரில்" போய் தங்களுக்குப் பதவி பெறுவதற்காகக் காவல் காத்திருக்கின்றார்கள். இது மிகவும் வெட்கக்கேடான நிலைமை.

தன்னுடைய கட்சி மூலம் தேர்தல் கேட்டுத் தோல்வி அடைந்தவர்களை பல்கலைக்கழக உறுப்பினர்களாக டக்ளஸ் தேவானந்தா போடுகின்றார். அவர்கள் பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களாகத் தரமானவர்கள் தெரிவு செய்யப்படுவதற்குத் தடையாக இருக்கின்றார்கள்.

தமிழர் சம உரிமை இயக்கத்தின் கொள்கை தகுதியானவர்களுக்குத் தகுதியானவை கிடைக்கப் பெறவேண்டும் என்பதே. கல்வியில் மட்டுமல்ல சுகாதாரத்துறையிலும் இதே பிரச்சினை இருக்கின்றது. உண்மையான சுகாதாரத் தொண்டர்களாக இருப்பவர்களில் கிட்டத்தட்ட 300 பேரின் வாய்ப்பைத் தட்டிப்பறித்து ஈ.பி.டி.பியினர் தமக்குத் தேவையானவர்களை நியமனம் செய்துள்ளனர். அதிலும் தகுதியற்றவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

தகுதியற்றவர்களுக்கு வேலை வழங்குவதில் டக்ளஸ் தேவானந்தா முதன்மையானவராக இருக்கின்றார். கடந்த 20 வருடங்களாக அமைச்சராக இருந்து வட பகுதியின் அனைத்துப் பொறிமுறைகளையும் தோல்வியடைச் செய்தவராக அவர் இருக்கின்றார். அதைச் செய்துவிட்டுப் பின்னர் அதைத் தான் சரி செய்வார் என்று மக்களைக் காக்க வைத்தும் வரிசையில் நிற்கவைத்தும் ஒரு போலித் தோற்றத்தை உருவாக்குகின்றார்.

அதனால் அனைவருக்கும் நேர்மையான, வெளிப்படைத் தன்மையான ஒரு பொறிமுறையை உருவாக்குதிலே நாம் அர்ப்பணிப்போடு இருக்கின்றோம். அதற்காகப் போராடுவோம். இன்று பொறிமுறை மாற்றம் (சிஸ்டம் சேன்ஜ்) பற்றிப் பேசப்படுகின்றபோது, ஏற்கனவே இருந்த பொறிமுறையை மிகவும் பாழ்படுத்திய, மிக மோசமாக அதை வீழ்ச்சியடையச் செய்த டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களை தற்போதைய அநுரகுமார அரசு என்ன செய்யப் போகின்றது என்பது மிகப் பெரிய கேள்வி?

தமிழ் மக்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியவற்றைத் தடுப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழர் சம உரிமை இயக்கம் ஜனாதிபதியிடம் முன்வைக்கின்றது. " - என்றார்.

# காட்டு யானை தாக்கி இளைஞர் ஒருவர் சாவு!



வவுனியா, செட்டிகுளம் - கிறிஸ்தவகுளம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

கிறிஸ்தவகுளம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இருவர் காட்டுக்குச் சென்றபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்தவகுளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய விக்னேஸ்வரன் கேதீஸ்வரன் என்பவரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.




# பொலிஸார் அசமந்தப்போக்கு! அநீதிகளுக்கு முடிவில்லையா?

## ‘சங்கு’ வேட்பாளர் சசிகலா ரவிராஜ் விசனம்

“என் வீட்டின் மீது தாக்குதல் நடத்தி என்னுயை வீட்டுக்குப் பொறிக்கப்பட்டிருந்த என்னுடைய கணவரின் பெயர் மீது மை பூசி அதனை அழித்து அநியாயம் செய்தவர்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.”

– இவ்வாறு “சங்கு“ சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜ் தெரிவித்தார்.

திருநெல்வேலி மற்றும் மருதனார் மடம் பகுதிகளில் பிரச்சார நடவடிக்கைகளை முன்னெடுத்தபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 3 நாட்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சி வேட்பாளரின் ஆதரவாளர் என்று கருதப்படும் பெண் ஒருவரால் என்னுடைய வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீட்டின் கண்ணாடிகள் நொருங்கின.

அதேவேளை, வீட்டு வாசல் தூணில் என்னுடைய கணவர் மாமனிதர் நடராஜா ரவிராஜ்ஜின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதன் மீது மை பூசி அழிக்கப்பட்டது. அதேவேளை,எமது மதில் சுவர்களில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் ஒருவரின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டபோதிலும் இதுவரையில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

என்னுடைய கணவர் ஜனநாயக ரீதியில் தேர்தலை எதிர்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தபோதே தென்னிலங்கையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்று வரை அவருடைய கொலையை மேற்கொண்டவர்களுக்கோ, அதற்குக் காரணமானவர்களுக்கோ தண்டனை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. நாட்டில் அநீதிகளுக்கு முடிவில்லையா?” – என்று அவர் கேள்வி எழுப்பினார்.

# தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த யுவதி ஒருவர் ரயிலில் மோதி பரிதாப மரணம்!

அதிவேக ரயிலில் மோதி யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அளுத்கமவிலிருந்து பொல்கஹவெல நோக்கிப் பயணித்த அதிவேக ரயிலில் மோதியே மேற்படி யுவதி சாவடைந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் கல்லனமுல்ல, பயாகல பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய யுவதியே உயிரிழந்துள்ளார்.

களுத்துறை வேலபுர வித்தியாலயத்துக்குப் பின்புறம் உள்ள ரயில் பாதையில் மேற்படி யுவதி கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்தபோது ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்



ளனர்.

இது தொடர்பில் களுத்துறை தெற்கு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் அதிகரிப்பு

அரச பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தீபாவளி முற்பணத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பெருந்தோட்ட தொழிலாளர்களுக்குக் கடந்த 10 ஆண்டுகளாக 10,000 ரூபா தீபாவளி முற்பணமாக வழங்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில், இம்முறை தீபாவளி முன்பணமாக 20,000 ரூபா வழங்கப்படவுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றின் கீழுள்ள பெருந்தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இந்த முற்பணம் வழங்கப்படவுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, வாழ்க்கைச் செலவு மற்றும் தொழிலாளர்களின் குறைந்த கொள்வனவு திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த விசேட முற்பணத் தொகை வழங்கப்படுவதாக அந்த அமைச்சின் செயலாளர் பி.கே.பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.



# புதிய அரசு இதுவரை பணம் அச்சிடவில்லை

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

அரசால் எந்தவொரு விதத்திலும் புதிய கடன்கள், எந்தவொரு நாட்டில் இருந்து அல்லது நிறுவனத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசு பணத்தை அச்சிட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை.

“பொதுவாக, புதிய திரைச்சேரி உண்டியல்கள் மற்றும் பத்திரங்கள் காலாவதியாகும் போது விகிதாசார முறையில் புதியவற்றை வெளியிடும் முறையை மத்திய வங்கி கொண்டுள்ளது.

அந்த செயல்முறை வழமையாக நடக்கும் ஒன்று.

மேலும், பணம் அச்சிடுவதை எடுத்துக் கொண்டால், உண்மையில் புதிய பணம் எதுவும் அச்சிடப்படவில்லை.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் கையொப்பத்துடன் நாணயத்தாள் ஒன்றை பார்க்க எனக்கும் விருப்பம். ஆனால் இதுவரை அது வெளியிடப்படவில்லை.” – என்றார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளது.

அதே நேரம், இதுவரை சபாநாயகராக இருந்த மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் பித்தலாட்ட உதவியோடு, பொலிஸ்மா அதிபர் நியமனத்தில் ரணில் விக்கிரமசிங்க செய்த குளறுபடி இப்போது நீதிமன்ற விசாரணையை எதிர்நோக்கி இருக்கின்றது. முன்னர் இந்த வழக்கில் ஜனாதிபதி என்ற முறைமையில் சிக்காமல் இருந்த ரணில் விக்கிரமசிங்கவை இப்போது அவர் பதவி இழந்துவிட்ட நிலையில் இவ்விவகாரத்தில் ஓர் எதிர் மனுதாரராகச் சேர்க்க உயர் நீதிமன்றம் நேற்று அனுமதித்திருக்கின்றது.

சர்ச்சைக்குரிய தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு எதிராக அரசமைப்புக் கவுன்ஸில் தீர்மானம் எடுக்க, அவரை அப்பதவிக்கு அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகரிப்பதான தவறான வியாக்கியானத்தை சபாநாயகர் வழங்கியதன் பேரில், தேசபந்து தென்னக்கோனை உடனடியாக பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

ஆயினும் பின்னர் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக செயல்படுவதற்குத் தடைவிதித்த உயர் நீதிமன்றம், அவரது நியமனம் தொடர்பாக இடம் பெற்றதாகக் கூறப்படும் குளறுபடித்தன விவகாரத்தை இப்போது விசாரிக்கத் தொடங்கி இருக்கிறது.

அரசமைப்பு கவுன்ஸிலின் முடிவைத்தான் தம்மிஷ்டப்படி வியாக்கியானம் செய்து மாற்றியமையை நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்ற நிலைப்பாட்டில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இருந்திருக்க கூடும். ஆனால் இப்போது நீதிமன்றம் அதை விசாரிக்கத் தொடங்கி விட்டது.

தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தவறான முறையில் நியமித்த 'கூட்டுக் களவாணிகள்' அதற்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலைமை வரும் என்றே தோன்றுகின்றது.

இலங்கையில் நீதித்துறை காலம் தாமதித்தாலும் தன் கடமையை பல சமயங்களில் செய்தே வந்திருக்கிறது. அதனிடம் சபாநாயகரும், முன்னாள் ஜனாதிபதியும் இந்த வழக்கில் நல்ல படிப்பினை பெறுவார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

## பயங்கரவாதத் தடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேசிய மக்கள் சக்தி அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி செயலகத்தின் சட்டத்துறை இயக்குநர் ஜே. எம். விஜயபண்டாரவை மேற்கோளிட்டு "தி மோர்னிங்" என்ற ஆங்கிலப் பத்திரிகை நேற்றுக் காலை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து எந்தவித நிலைப்பாட்டையும் எடுக்கவில்லை. புதிய நாடாளுமன்றத்தில் அது குறித்து ஆராயப்பட்டு, அந்தச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படும்" – என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு ஒழிக்கப் போவதில்லை, சில மாற்றங்களை மட்டுமே அதில் செய்ய முன்வரும் என்பது விஜித ஹேரத்தின் கருத்து தெளிவுபடுத்தியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

# கிணற்றில் இருந்து அடையாளம் தெரியாத ஆணின் சடலம் மீட்பு!



கிணற்றில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நாரம்மல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனாவிட்டிய பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றின் கிணற்றில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்று நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

நீதிவான் விசாரணைகளின் பின்னர் சடலம் குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜே.வி.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செயற்பாடுகளுக்குள் ஜே.வி.பி. கட்சியினரின் தலையீடுகள் அதிகரிக்கின்றன என்று பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பிற்பாடு வடக்கு மாகாணத்தின் அரச நிர்வாகச் செயற்பாடுகளில் ஜே.வி.பி. கட்சியினரின் தலையீடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன என்று பலர் தங்களுடைய குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

குறிப்பாக வடக்கு மாகாண ஆளுநராக நா.வேதநாயகன் தனது பொறுப்புக்களை ஏற்றகையோடு வடக்கு மாகாண ஆளுநருக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் ஒன்று ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரம் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தமை பலத்தை சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ். பல்கலைக்கழகத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார் என்ற செய்தியை ஜே.வி.பி. கட்சியினரே நேரடியாகச் சென்று பல்கலைக் கழக நிர்வாகத்திடம் தெரிவித்திருக்கின்றனர். அரச பல்கலைக்கழகம் ஒன்றுக்குள் ஜனாதிபதியின் வரவை உறுதிப்படுத்த வேண்டியது ஜனாதிபதி செயலகத்தினரா? அல்லது அவர் சார்ந்த கட்சியினரா? என்ற ஒரு கேள்வியை விரிவுரையாளர் பலரும் முன்வைத்திருக்கின்றனர்.

இந்நிலையில், பனை அபிவிருத்திச் சபையினுடைய தலைவர் தெரிவிலும் ஜே.வி.பியின் தலையீடு காணப்படுகின்றது என்று சுரேஷ் பிரேமச்சந்திரனும் குற்றம் சுமத்தியுள்ளார். அண்மையில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராக இரு வாரங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டிருந்த இ.செல்வினை மாற்றுவதற்கு ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் தலைமையில் முயற்சிகள் இடம்பெறுகின்றன என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக வி.சகாதேவன் இன்று புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார்.

இவ்வாறு அரச நிர்வாக சேவைக்குள் ஜே.வி.பியின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலையீடு அதிகரித்துக் காணப்படுகின்றது என்றும், ஊழலை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சிப்பீடம் ஏறிய அநுரகுமார திஸாநாயக்க, அரச நிர்வாகத்துக்குள் கட்சி முக்கியஸ்தர்கள் தலையிடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார் என்ற கேள்வியைப் பலரும் எழுப்பி வருகின்றனர்.

## சறுக்குகின்றது அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிலேயே மேற்படி விடயத்தை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

"தேசிய மக்கள் சக்தி இன்று வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை "ஒழிப்போம்" என்ற தெளிவான நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கும் வாக்குறுதியை நீங்கள் உங்களது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாத்திரம் சொல்லவில்லை. இந்தச் சட்டத்தை ஒழிப்போமென உங்களது கட்சி அறுதிபடத் தீர்மானித்த பல நிகழ்வுகளிலே நானே கலந்துகொண்டு, பேசியும் இருக்கின்றேன். இப்போது சறுக்கத் தொடங்கிவிட்டீர்கள்!" – என்று குறிப்பிட்டிருக்கின்றார் சுமந்திரன்.





# நாட்டில் பொருளாதார சுயாதிகாரமொன்றை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் பொருளாதார சுயாதிகாரமொன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும், அதற்கு எமது நாட்டு ஏற்றுமதியாளர்களின் பூரண ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் உயரதிகாரிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி வர்த்தகத்தை இலகுபடுத்துவதற்காக ஏனைய அரச நிறுவனங்களையும் இலங்கை சுங்கத்தையும் ஒருங்கிணைத்து ஒற்றைச் சேவை சாளரத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் ஏற்றுமதி தொடர்பான அரச நிறுவனங்களின் செயற்திறனை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

அத்துடன், எரிசக்தி விலைகளை குறிப்பிடத்தக்க அளவு குறைத்தல், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல், சர்வதேச சந்தைக்குள் பிரவேசிக்கும் வகையில் தூதரக சேவைகளை மறுசீரமைத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க குறிப்பிட்டார்.

இந்த அனைத்து நோக்கங்களையும் மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்காக அனைவரினதும் பாரிய பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நிர்மாணத்துறை, பண்டப் போக்குவரத்து மற்றும் விநியோகம், மீன் ஏற்றுமதி, தகவல் தொழில்நுட்பம், மாணிக்கக்கல் மற்றும் ஆபரணங்கள், அச்சுத்துறை, கண்ணாடி மற்றும் மட்பாண்டங்கள், மசாலாப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு தொழிற்துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தி ஏற்றுமதியாளர்கள் இதில் கலந்து கொண்டனர். ஒவ்வொரு கைத்தொழிற்துறைகளிலும் எழுந்துள்ள பிரச்சினைகள் ,பொதுவாக ஏற்றுமதி துறை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்து இங்கு எடுத்துரைக்கப்பட்டது.

ஏற்றுமதி வருவாயை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், முதலீட்டு ஊக்குவிப்பு, முறையான ஒழுங்குமுறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்கட்டமைப்பு அபிவிருத்தி, தொழிற்துறைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பது, சந்தைப் பிரவேசம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வரிச்சலுகைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் மங்கள விஜேசிங்க மற்றும் அதன் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.



# மார்ச் மாதத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டில் முதலாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகளின் முதலாம் கட்டம் ஜனவரி 27ஆம் திகதி முதல் ஏப்ரல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அறுகம்பை விசாரணை தொடர்பான இரகசிய அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

அறுகம்பையிலுள்ள சுற்றுலாத் தளங்களை இலக்கு வைத்து பயங்கரவாத தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் இரகசிய அறிக்கையொன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் கைதாகியுள்ள சந்தேக நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துவரும் பயங்கரவாத விசாரணை பிரிவின் அதிகாரிகளால் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேனவிடம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைதான இருவர் தொடர்ந்தும் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாக அந்த அதிகாரிகள் நீதிமன்றுக்கு அறியப்படுத்தியுள்ளனர்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைப் பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான், விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை அடுத்த வழக்கு தவணையில் நீதிமன்றில் முன்வைக்குமாறு உத்தரவிட்டார்.




# அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரம் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளவும்

அத்தியாவசிய தேவைகளுக்காகக் கடவுச்சீட்டு தேவைப்படுகின்றவர்கள் மாத்திரம் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித்த ஹேரத் இதனை அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் வைத்துத் நேற்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போது கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கான கடவுச் சீட்டு வெற்றுப் புத்தகங்களின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப் பட்டதாக உள்ளது.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் இது அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

இது கட்டம் கட்டமாகவே இலங்கைக்குக் கிடைக்கிறது.

இதனால் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் சிக்கல் உள்ளது.

எனவே அத்தியாவசியமான தேவை உடையவர்கள் மாத்திரம் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாறாக அனைவரும் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகப் பிரவேசித்து, நிலவுகின்ற நெரிசலில் அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டாம்" – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுரவின் உண்மை முகம்

ஜனநாயகம், அடிப்படை உரிமைகள், தார்மீக கடப்பாடுகள் பற்றி எல்லாம் எதிரணியில் இருந்த போது பெரும் உபதேசங்களைச் செய்த தேசிய மக்கள் சக்தித் தரப்பு, இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் அவற்றையெல்லாம் அடியோடு மறந்து, தன் எதேச்சாதிகாரத்தை கட்டவிழ்த்து விட தொடங்கி விட்டது.

எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த போது அடக்குமுறைக்கு எதிராக அதிகம் குரல் எழுப்பி ஆரவாரம் பண்ணியவர் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இப்போது அதிகாரம் அவர் கையில். அதனால் தன் கைவரிசையை அவர் காட்டத் தொடங்கி விட்டார்.

இந்த நாட்டில் கடந்த 46 ஆண்டுகளாக கொடூரமான - கொடூரமான - மிருகத்தனமான - காட்டுமிராண்டித்தனமான- விவகாரமாக பயங்கரவாத தடை சட்டம் நீடிக்கின்றது என்பதை எதிர் அணியில் இருந்து ஆக்ரோஷமாக குரல் எழுப்பி எதிர்த்து வந்தவர்களில் முக்கியமானவர் இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இப்போது அவரது அரசு அந்த மிருகத்தனமான சட்டம் தொடர்பில் தனது முரட்டுத்தனமான - முட்டாள்தனமான - போக்கை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி செயலகத்தின் சட்டத் துறை இயக்குனர் ஜே. எம். விஜயபண்டாரவை மேற்கோளிட்டு 'தி மோர்னிங்' என்ற ஆங்கிலப் பத்திரிகை நேற்றுக் காலை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் பிழையொன்றுமில்லை. அது பயன்படுத்தப்பட்டு வந்த விதமே தவறு' - என அவர் புது தத்துவத்தை - உபதேசத்தை - அவர் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார் என அந்தச் செய்தியில் சொல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து சமூக வலைத் தளங்களில் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக கிளம்பியிருக்கும் எதிர்ப்பலைக்குப் பதில் தரும் வண்ணம், அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் பிமல் ரத்நாயக்க 'எக்ஸ்' தளத்தில், டிஜிட்டல் செய்தித்தளத்தில் வந்த பிறிதொரு செய்தியைப் பகிர்ந்திருந்தார்.

இந்தச் செய்தியில், 'தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டம் குறித்து எந்த வித நிலைப்பட்டையும் எடுக்கவில்லை. புதிய நாடாளுமன்றத்தில் அது குறித்து ஆராயப்பட்டு, அச் சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்படும்' என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித்த ஹேரத் தெரிவித்தார் என்று குறிப்பிட்டிருந்தது.

பிமல் ரத்நாயக்கவின் பதிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் பதிலளித்திருக்கின்றார்.

"தேசிய மக்கள் சக்தி இன்று வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தை 'ஒழிப்போம்' என்ற தெளிவான நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கிறது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழிக்கும் வாக்குறுதியை நீங்கள் உங்களது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மாத்திரம் சொல்லவில்லை. இந்தச் சட்டத்தை ஒழிப்போமென உங்களது கட்சி அறுதிபடத் தீர்மானித்த பல நிகழ்வுகளிலே நானே கலந்து கொண்டு, பேசியுமிருக்கிறேன். இப்போது சறுக்கத் தொடங்கிவிட்டீர்கள்!" எனக் குறிப்பிட்டிருக்கின்றார் சுமந்திரன்.

அநுர ஆட்சிப்பீடத்தின் உண்மை முகம் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றது.

முன்னைய ஆட்சிப் பீடங்களுடன் ஒப்பிடுகையில் இதுவும் - அநுரகுமாரவின் அதிகார பீடமும் - ஒரு குட்டையில் ஊறிய மட்டைதான்...!

# விஜய் ரசிகர்களில் பாதி பேர் எனக்குத்தான் வாக்களிப்பர்

## சீமான் நம்பிக்கை



“விஜய் வருகையால் எனது வாக்குகள் குறையாது. அவரது ரசிகர்களில் பாதி பேர் எனக்குத்தான் வாக்களிப்பார்கள்.”

– இவ்வாறு நா.த.க. தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்ட நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளுடனான கலந்தாய்வு கூட்டம்நேற்று தேனி அருகே மதுராபுரியில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் உள்ள பகுதிநேர ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஊதியம் வழங்காமல், வெறுமனே தீபாவளி வாழ்த்துகள் மட்டும் கூறுவது ஏற்புடையதல்ல. எங்களைப் பொறுத்தவரை பாஜக தேவையில்லாத கட்சி. நீட், ஜி.எஸ்.டி. உள்ளிட்ட மக்கள் விரோத திட்டங்களை கொண்டு வந்தது காங்கிரஸ் ஆட்சியில் தான். அதற்கு துணையாக இருந்தது தி.மு.க. என் இனத்தின் எதிரி காங்கிரஸ்.

பொதுவாக ஒரு நடிகரை பார்க்க வந்த கூட்டம் எல்லாம் வாக்குகளாக மாறாது. கூட்டணியில் இருப்பவர்களுக்கு ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கொள்கை விஜய்யின் பெருந்தன்மை. அதனை ஏற்று அவரது கூட்டணியில் இணைவது அவரவரது விருப்பம். எங்களைப் பொறுத்தவரை யாருடனும் கூட்டணி கிடையாது. நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டியிடும். விஜய்யின் அரசியல் வருகையால் எனது வாக்குகள் குறையாது. ஏனென்றால், விஜய்யின் ரசிகர்களில் பாதி பேர் எனக்குத்தான் வாக்களிப்பார்கள்.” என்றார்.

# ஆக்கபூர்வ ஆலோசனைகளை மாத்திரம் கருத்தில் கொள்வோம்

## த.வெ.க. தலைவர் விஜய் தெரிவிப்பு

“நம்முடைய அரசியல் பயணத்தை, நாம் தொடங்கும் முன்னரே நம்மை விமர்சித்தவர்கள். இனி இன்னும் கடுமையாக விமர்சிப்பார்கள். அத்தகைய விமர்சனங்களில் ஏதேனும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தெரிந்தால், அவற்றை மட்டுமே கருத்தில் கொள்வோம்.”

– இவ்வாறு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ உங்கள் ஒவ்வொருவரின் அன்பிலும் மனம் நெகிழ்ந்து, கண்களில் ஆனந்தக் கண்ணீர் தேங்க, அரசியல் வெற்றிப் பயணத்தைத் தொடங்கி இருக்கிறோம். இப்பயணத்தின் இலக்கை, நம் தமிழ்நாட்டு மண் இனிவரும் நாள்களில் பார்க்கும். அது உறுதி. நம் தமிழக வெற்றிக் கழகத்தின் மாநாட்டில் கண்ட காட்சிகள் எல்லாம், கண்களிலும் மனதிலும் கல்வெட்டுகளாகவே பதிந்துவிட்டன.

தமிழக அரசியல் வரலாற்றில், காலாகாலத்திற்கும் அழிக்கவே இயலாத பதிவுகள் அவை. ஆம். நமது மாநாட்டில், அலைகள் கை தட்டும் ஆர்ப்பரிக்கும் கடலைக் கண்டேன். கதிர்கள் வெடித்துவிழும் ஒளிப்பிழம்புகளைக் கண்டேன். தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றியோடு. தமிழகத்தின் வெற்றிக்கான வெள்ளோட்டத்தையும் கண்டேன். தீர்க்கமான அரசியல் வெற்றிக்கான திசைகள் திறக்கக் கண்டேன். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனாலும், மனம் திளைத்ததை. மகிழ்ச்சியில் தித்தித்ததை இதற்குமேல் எப்படிச் சொல்ல? இவை எல்லாவற்றையும். அப்படியே வார்த்தைகளில் வடித்தெடுக்க நானொன்றும் கவிஞன் இல்லை. உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்த மட்டுமே தெரிந்த சாதாரண மனிதன்.

இருந்தும் நினைவுகளைப் பகிர்வதும்கூட ஓர் அழகிய கவிதைதானே. அதனால்தான், மனதிலும் நினைவிலும் சேகரமானதில் சிலவற்றை மட்டுமே பகிர்ந்தேன். இந்த வேளையில், உங்கள் ஒவ்வொருவரையும் எண்ணி மனம் நெகிழ்கிறேன். உங்களை என் தோழர்களாக, தூய குடும்ப உறவுகளாகப் பெற்றது என் வாழ்நாள் வரம். வழியெங்கும் வசந்தத்தை விதைக்கிற வைரநெஞ்சங்கள் நீங்கள். நம் மக்களோடு சேர்த்து, உங்களையும் உயரத்தில் வைத்து அழகு பார்க்கவே இந்த அரசியல் பயணம்.

என் எல்லா வார்த்தைகளுக்கும் நீங்கள் உயிர் கொடுத்தீர்கள். அதனால்தான், நமது மாநாட்டின் வாயிலாக, பொறுப்புணர்வுடன் கூடிய கடமையுடன், கட்டுப்பாடான. கண்ணியமான, ஆரோக்கியமான உத்வேகமான, உரிமைகளை மீட்டெடுக்கும் அரசியலை இந்த மண்ணிலே விதைத்திருக்கிறோம். மாநாட்டில் நம்மைக் கண்ட நம் தமிழக மக்களும் அதை உணர்ந்திருப்பர். நம்முடைய அரசியல் பயணத்தை, நாம் தொடங்கும் முன்னரே நம்மை விமர்சித்தவர்கள். இனி இன்னும் கடுமையாக விமர்சிப்பார்கள். அத்தகைய விமர்சனங்களில் ஏதேனும் ஆக்கபூர்வமான ஆலோசனைகள் தெரிந்தால், அவற்றை மட்டுமே கருத்தில் கொள்வோம். மற்றவற்றை மறந்தும்கூட மனதில் ஏற்றிவிடாமல் கடந்து செல்லப் பழகிக் கொள்வோம்.




அனைத்து மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நோக்கிய உழைப்பு மட்டுமே இனி நம் அரசியல். அதைச் சாத்தியப்படுத்துதல் மட்டுமே நம் “தீவிர அரசியல் செய்தலாக இருக்கும். நம்மைத் தாயுள்ளத்தோடு வரவேற்கும் நம் தமிழ்நாட்டு மக்களுக்காக, இன்னும் அதி தீவிரமாக, தீர்க்கமாக, தீர்மானமாக உழைப்போம். தங்கள் மண்ணைச் சேர்ந்த மகன்களான, மகள்களான நம்மைத் தக்க இடம் நோக்கி, தகுதியான அங்கீகாரம் நோக்கி மக்களே அழைத்துச் செல்வர். ஆகவே, அவர்களின் மனதில் நிறையும் அளவிற்கு, அதிக நம்பிக்கையுடனும் நன்றியுடனும் ரெட்டைப் போர்யானைகளின் பலத்துடன் உழைப்போம்.

வாகைப் பூக்கள் நமக்காகவே நாடெங்கும் பூத்துக் குலுங்கப் போகின்றன. நமது மாநாட்டின் மூலம், வி.சாலை நமது வியூகச் சாலையாகவும், விவேக சாலையாகவும் மற்றும் வெற்றிச் சாலையாகவும் ஆனது. போலவே, நம்மை யாராலும் வெல்ல இயலாத வித்தியாசமான, யதார்த்த அரசியல் சாலைக்கும் நம்மை அழைத்துச் செல்லும். எப்போதும் ஆக்கபூர்வமான அரசியலையே கையிலெடுப்போம். 2026 இல் நம் இலக்கை அடைவோம். வெற்றி நிச்சயம்.” என்று குறிப்பிட்டுள்ளார்.





# பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நாவின் நிவாரண நிறுவனத்திற்கு இஸ்ரேல் தடை

பாலஸ்தீன அகதிகளுக்கா ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனத்திற்கு இஸ்ரேல் தடை விதித்துள்ளது.

இதன்படி, இஸ்ரேல் மற்றும் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள கிழக்கு ஜெருசலேம் பகுதிக்குள் ஐக்கிய நாடுகள் சபையின் பலஸ்தீன ஏதிலிகளுக்கான நிறுவனம் செயற்படுவதைத் தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு இஸ்ரேல் நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது.

மேற்படி சட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றுவதற்குத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், பாலஸ்தீன ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணம் மற்றும் பணியாளர்களுக்கும் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடையானது காசா மற்றும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குட்பட்ட மேற்குக் கரையில் செயல்படும் நிறுவனத்தின் திறனைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, பாலஸ்தீன ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனத்தின் பணியாளர்களுக்கு இனிமேல் இஸ்ரேலுக்குள் உத்தியோகப்பூர்வ பாதுகாப்பு வழங்கப்பட மாட்டாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கிழக்கு ஜெருசலேமில் உள்ள பாலஸ்தீன ஏதிலிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனத்தின் தலைமையகம் மூடப்படவுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# பணியாளர்களுக்கு எதிராக தாக்குதல் ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை





இஸ்ரேல் அல்லது மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்கப் பணியாளர்களுக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்ளப்படுமாயின் கடுமையான விளைவுகள் ஏற்படும் என ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்கத் தூதுவர் லிண்டா கிரீன்ஃபீல்ட் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்காப்பு நடவடிக்கைகளுக்காகச் செயற்படுவதற்கு அமெரிக்க ஒருபோதும் தயங்காது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு தாக்குதல் இடம்பெறுமாயின், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான நேரடி துப்பாக்கிப் பிரயோகத்தின் முடிவாக இது இருக்குமென லிண்டா கிரீன்ஃபீல்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானில் உள்ள ஏவுகணை தொழிற்சாலை மற்றும் ஏனைய தளங்களை இலக்கு வைத்து இஸ்ரேலில் கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து கூடிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையிலேயே, ஈரானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# சூடானில் ஆட்டோ மீது விமானம் மோதியதில் 4 விவசாயிகள் பலி!

ஆபிரிக்க நாடான சூடானில் பூச்சி மருந்து தெளிக்கும் சிறிய ரக விமானம் தரையிறங்கியபோது, முச்சக்கர வண்டி மீது மோதியதில் 4 பேர் உயிரிழந்தனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சூடானில் பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிப்பதற்குச் சிறிய ரக விமானங்களைப் பயன்படுத்தப்படுகின்றது.

அந்தவகையில், சிறிய ரக விமானம் ஒன்று பூச்சி மருந்து தெளிக்கும் பணியின் போது, விவசாய நிலப்பகுதியில் உள்ள ஓடுபாதையில் தரையிறங்கியது.

ஓடுபாதையில் வேகமாகச் சென்ற விமானம் திடீரென எதிரே வந்த ஆட்டோ மீது மோதியது. இதில் ஆட்டோ கடுமையாகச் சேதம் அடைந்தது.



இவ்விபத்தில் 4 விவசாயிகள் உயிரிழந்ததுடன், 8 பேர் பலத்த காயமடைந்தனர் என, வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



# கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு தொடர்பில் போலி அழைப்பை மேற்கொண்ட தந்தை, மகன் கைது

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு தொடர்பில் போலி தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களான தந்தை மற்றும் மகன் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக் கிழமை விமான நிலையத்தில் உள்ள தொலைபேசி செயற்பாட்டாளரை தொடர்புகொண்டு பாதுகாப்பு தொடர்பில் போலி தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் வாரியபொல பகுதியை சேர்ந்த 67 வயதுடைய தந்தை மற்றும் 30 வயதுடைய மகன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.




# தீபாவளியை முன்னிட்டு ஊவா மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை

ஊவா மாகாண சபையின் கீழுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி விடுமுறை வழங்குவதற்கு ஊவா மாகாண ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளார் என மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்பட உள்ளமையினால், மறுநாள் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மேற்படி நாளுக்கான கல்வி செயற்பாடுகளை எதிர்வரும் நவம்பர் 9 ஆம் திகதி முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக ஊவா மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஆசிரிய ஆலோசகர் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திப்பதாக சட்ட மாஅதிபர் அறிவிப்பு

இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவையின் சம்பள அளவுகளில் காணப்படும் முரண்பாடுகளை நிவர்த்தித்து, சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாக சட்ட மாஅதிபர் உயர் நீதிமன்றத்திற்கு நேற்று அறிவித்துள்ளார்.

ஆசிரிய ஆலோசகர்களின் சம்பளங்களில் நிலவும் முரண்பாடுகளை நீக்குமாறு கோரி, அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர்கள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனு ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் தரப்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி நுவன் போப்பகே, ஆசிரிய ஆலோசகர்களின் சம்பளம், ஆசிரியர்களின் சம்பளத்தை விட மிகக்குறைந்த மட்டத்தில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக தமது சேவைபெறுநருக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாகவும் மன்றில் சுட்டிக் காட்டினார்.

ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளங்களுக்கிடையே சில முரண்பாடுகள் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் அந்த முரண்பாடுகளை நிவர்த்திசெய்து சம்பளத்தை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யுரேஷா டி சில்வா தெரிவித்தார்.

இந்த விடயங்கள் தொடர்பில் மனுதாரர் தரப்பினர் இணக்கம் தெரிவித்ததுடன், அதன் பின்னர் குறித்த மனு தொடர்பான விடயங்களை முடிவுறுத்தவும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

மனுவின் பிரதிவாதிகளாக கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சிலர் பெயரிடப்பட்டிருந்தனர்.



# தேசபந்து தென்னகோன் நியமனத்துக்கு எதிரான மனுவில் ரணிலை பிரதிவாதியாக பெயரிட உயர் நீதிமன்றம் அனுமதி

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னகோனை நியமிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக பெயரிடுவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

அரசமைப்பிற்கு முரணான வகையில் தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் இளம் ஊடகவியலாளர்களின் சங்கத்தால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மனு நேற்று நகர்த்தல் பத்திரம் ஊடாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மனு ப்ரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேசபந்து தென்னகோனை பொலிஸ் மாஅதிபராக நியமித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியுள்ளமையால் அவரது விடுபாட்டுரிமை நிறைவடைந்துள்ளதாக, அந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மனுதாரர் தரப்பின் சார்பில் முன்னிலையாகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மன்றில் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய ரணில் விக்கிரமசிங்கவின் பெயரை மனுவில் பிரதிவாதியாகக் குறிப்பிடுவதற்கான இயலுமை காணப்படுவதாக விடயங்களை முன்வைத்த ஜனாதிபதி சட்டத்தரணி குறிப்பிட்டார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக பெயரிடுவதற்கு அனுமதி வழங்கியது.

முன்னதாக இந்த மனு மற்றும் இதனுடன் தொடர்புடைய 7 மனுக்கள் தொடர்பான விடயங்கள் உயர் நீதிமன்றத்தால் ஆராயப்பட்டிருந்தன.

மேற்படி விடயங்கள் ஆராயப்பட்டதன் பின்னர் கடந்த ஜூலை 24ஆம் திகதியன்று மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கி மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை அமுலாகும் வகையில் தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபர் பதவியில் செயற்படுவதை தடுத்து இடைக்கால உத்தரவும் நீதியரசர் குழாத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2024




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். சில விஷயங்களில் விட்டுக்கொடுத்து செல்வது கூட உங்களுக்கு மன உளைச்சலைத் தரும்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. தவறுகள் நேராமல் இருப்பதற்கு சிறிது கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சில ஈகோ பிரச்சினைகளை சந்திக்க நேரும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

வீட்டை பராமரிக்கும் அல்லது புதுப்பிக்கும் வகையில் செலவினங்கள் ஏற்படலாம். தேவையற்ற செலவுகளும் ஏற்படலாம்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உங்கள் வளர்ச்சிக்கு உகந்த நாள். மகிழ்ச்சியான புது அனுபவங்கள் உங்களுக்கு காத்திருக்கின்றது.

பணியில் காணப்படும் வளர்ச்சி உங்களை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவதற்கான நேரம். இதனால் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

இன்று நீங்கள் விரும்பும் வகையில் பணம் செலவு செய்யும் அளவில் சுதந்திரம் காணப்படும். நீங்கள் பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

அமைதியான அணுகுமுறையை மேற்கொள்ளவும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஆன்மீகம் சம்பந்தப்பட்ட பயணங்களுக்கு இன்றைய நாள் சிறந்தது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். பொறுமையாக இருப்பதன் மூலம் நீங்கள் நினைத்தது நடக்கும்.

பணியிடத்தில் சில மன உளைச்சல்கள் காணப்படும். பணியில் கூடுகள் சுமைகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை கவனமாக பகிர்ந்து கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பது நல்லது.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தந்தையின் உடல் நலம் குறித்த செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உணர்ச்சிவசப்படுவீர்கள். பாதுகாப்பற்ற உணர்வு காணப்படும். இன்றைய நாள் மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. உங்கள் வளர்ச்சி பற்றி கவலைப்படுவீர்கள்.

பணிகளைக் கையாளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் தவறுகள் ஏற்படும். எனவே கவனமாக பணியாற்றவும்.

உங்கள் மனதில் குழப்பமான உணர்வுகள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது நல்லது.

பணத்திற்கான சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. கடன்கள் ஏற்படும் வாய்ப்பும் அதிகமாக காணப்படுகின்றது.

தொண்டை எரிச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ந்த நீர் பருகுவதை தவிர்க்கவும்.




நீங்கள் கடினமாக உழைத்து பலனை எதிர்பார்க்க வேண்டும். பாடல்கள் கேட்பது திரைப்படம் பார்ப்பது போன்றவற்றின் மூலம் அமைதியடையுங்கள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடனான தகவல் பரிமாற்றத்தில் தடைகள் ஏற்படும். நீங்கள் இதனை கவனமாகக் கையாள வேண்டும்.

பண இழப்பிற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இதனை கண்காணிக்க வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளால் அவதிப்படுவீர்கள்.




இன்று நீங்கள் புதியதொரு வளர்ச்சியை நோக்கி முன்னேறுவீர்கள். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மூலம் வெற்றி காணலாம்.

பணியில் பெயரையும் புகழையும் சம்பாதிப்பீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பை வெளிப்படுத்தி மகிழ சாத்தியம் உள்ளது. இதனால் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் வாய்ப்புள்ளது.

பண வரவு அதிகமாக காணப்படுகின்றது. உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று பயணங்கள் காணப்படுகின்றன. யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இசை விழாக்களில் பங்கு கொள்வது ஆறுதலைத் தரும்.

முறையான திட்டமிட்டு நேரத்தோடு செயல்பட்டால் எளிதாக பணியாற்றலாம்.

உறவில் கோபதாபங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையிடம் கவனமாகப் பழகுங்கள்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமானதாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்கள் உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் கண்காணிக்க வேண்டும். நேர்மறையான அணுகுமுறை வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இன்று பணியின் போது சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். மேலதிகாரிகள் ஆதரவு அவ்வளவாக காணப்படாது.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் கவனமாக வெளிப்படுத்துங்கள்.

பணப்புழக்கம் இன்று குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்களை வருத்தத்திற்குள்ளாக்கும்

மன உளைச்சல் காரணமாக ஆரோக்கிய பாதிப்பு ஏற்படும். தூக்கமின்மை காணப்படும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.10.2024




இன்று சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் அதுவும் உங்களுக்கு நல்லது.

இன்று பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிச் சுமை காணப்படும். நீங்கள் அதனை சாமர்த்தியமாகக் கையாள வேண்டும்.

உங்கள் உறவில் பாதுகாப்பற்ற உணர்வு காணப் படும். இதனை சரி செய்தால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

நிதியைப் பொறுத்தவரை ஏற்றத்தாழ்வு காணப் படும். பணத்தைக் கையாளும்போது கவனம் தேவை.

இன்று குளிர்ந்த உணவுகளை தவிர்க்க வேண் டும்.




இன்றைய நாளை உங்கள் சுய வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். நேர்மையான முயற்சிகளால் விரும்பும் பலன்களை அடையலாம்.

பணியிடத்தில் நல்ல வளர்ச்சி காணப்படும். உங்கள் முயற்சியின் மூலம் நல்ல பெயரையும் புகழையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களின் செலவிற்கான பணம்உங்களுக்கு கிடைக்கும். மங்களகரமான நிகழ்சிகளுக்கு பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தலைவலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




உங்கள் முயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியையும் மகிழ்ச்சியையும் அளிக்கும்.

இன்று அதிர்ஷ்டம் உங்களைப் பார்த்து புன்னகை பூக்கும். உங்கள் முயற்சிகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

குடும்பத்தில் அன்பு மிகுந்து காணப்படும். உங்கள் துணையுடன் ஒற்றுமையாக பகிர்ந்து மகிழ் வீர்கள்.

இன்று நிதிநிலை சுதந்திரமாக காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். அமைதியுடனும் தன்னம் பிக்கையுடனும் இருங்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை.

நீங்கள் சிறிது குழம்பி காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இதனால் உறவில் சில அசௌகரியங்கள் ஏற்படும்.

இன்று பண வரவுக்குச் சாதகமான நாள் அல்ல. இன்று பணம் குறைந்த அளவில் காணப்படும்.

ஜீரணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.


Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park